# கோலம் காண வாரீர்

ராகம் : நாடகுறிஞ்சி	தாளம் : ஆதி

இயற்றியவர் : அம்புஜம் க்ருஷ்ணா

## பல்லவி

கோலம் காண வாரீர் (திருக்)
கோசல பாலன் கருணாலவாலன் மாலோலன் திருக்-

## அனுபல்லவி

ஞாலம் உய்ய பானு குலத்துதித்து
நில மகள் கரம் கொண்ட ரகுராமன் கல்யாண-

## சரணம்

தந்தை சொல் ஏற்று கானகம் ஏகி
தண்டக வன முனிவர்க்கபயம் ஈந்து
தஞ்சமென்றிருவருக்கு அஞ்சேலென்றருளி
தரணியோர் மகிழ்வுற தசமுகனை இறுத்து
அனுஜர் மூவர் புடை சுழ ஆஞ்ச நேயன் பதம் தாங்க
ஜனக சுதையுடன் கனக சிம்மாசனத்தமர் பட்டாபிராமன் திருக்-

*****************

# கண்டேன்! கண்டேன்!

ராகம் : வசந்தா தாளம்: ஆதி

இயற்றியவர் : அருணாசல கவி

## பல்லவி

கண்டேன்! கண்டேன்! சீதையைக் -
கண்டேன் ராகவா

## அனுபல்லவி

அண்டரும் காணாத லங்காபுரத்திலே
அரவிந்த வேதாவை தரவந்த மாதாவை (கண்டேன் ...)

## சரணம்

அடல் சேரும் வாலியை வானுலகிலே கூட்டி
அவனியை சுக்ரீவன் ஆள முடி சூட்டி
உடனே நீ தூது போ என்ற சொல் அமுதூட்டி
உன்னெழில்.. பாராட்டி

விட வந்த அனுமந்தன் நான் என்று சீராட்டி
விவரம் சொல்ல உயிர் கொண்டிருக்கிறாள் சீமாட்டி
திடமா லக்ஷ்மணன் செய்த பர்ணசாலை வீட்டில்
தேவாதி தேவா உன் திரு ஆழிதனைக்-காட்டி (கண்டேன் ...)

*****************